STC.NO.53/2021 PW-1

நாள் : 08.03.2023

பெயர்: நாகேந்திர பிரசாத்

க/பெ : ரவிந்திரன்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. இவ்வழக்கில் 6வது எதிரிக்கும் உங்களுக்கும் கொடுக்கல் வாங்கல் தனிப்பட்ட முறையில் உள்ளதா என்றால் இல்லை. சாலிம் ஜுஸ் கொடுக்க வேண்டிய பணத்தை தான் கொடுத்தார்கள். 6வது எதிரி அப்துல் வகாப்பிற்கு எந்தவிதமான பொருளும் சப்ளை செய்யவில்லை என்றால் ஆமாம். அவரிடம் இருந்து தனிப்பட்ட முறையில் உங்களிடம் பாக்கியும் தரவேண்டியது இல்லை என்றால் ஆமாம். 6வது எதிரி 1முதல் 5 எதிரிகளுக்கான அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை Indemnity Bond எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. 1வது எதிரி தன்னுடைய Sister Concern என்பதினால் காசோலை கொடுத்தார். 1வது எதிரி 6வது எதிரிக்கு Sister Concern என்று எதன் அடிப்படையில் கூறுகிறீர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கூட்ஸ் சப்ளை செய்வதற்கு 1வது எதிரி தரப்பில் இருந்து Purchase Order கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அந்த Purchase Order களை நீதிமன்றத்தில் வழக்கின் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். அதற்குரிய Account Statements தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம்.

2. கடைசியாக எப்போது எதிரிகள் தரப்பில் இருந்து உங்களுக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றால் NCLT தீர்ப்பாயத்தில் ரூபாய் 3,00,000 வரைவு காசோலையாக கொடுக்கப்பட்டது அதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு ரூபாய் 1,00,000 கொடுத்தார்கள். இந்த காசோலை வழக்கில் 1 முதல் 5 எதிரிகள் உங்களுக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். NCLT தீர்ப்பாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காம்ரமைஸ் மெமோவில் ஆறாம் எதிரி கையெழுத்து

செய்யவில்லை என்றால் ஆமாம். 1 முதல் 5 எதிரிதான் காம்ரமைஸ் மெமோவில் கையெழுத்து செய்துள்ளார்கள். 6வது எதிரி கையெழுத்து செய்யவில்லை அதனால் 6வது எதிரியை அந்த Compromise Memoவில் உள்ள சங்கதிகள் கட்டுப்படுத்தாது என்றால் அதை பற்றி தெரியாது Sister Concern என்று சொன்னார்.

3. நீங்கள் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் 6ம் எதிரி மட்டும் தான் அறிவிப்பை பெற்றுக்கொண்டார் மற்றவர்கள் பெறவில்லை என்றால் ஆமாம். 1வது எதிரி கம்பெனியை 2018 வாக்கிலேயே NCLT தீர்ப்பாயத்தின் மூலம் Interim Resolution Professional மூலமாக அவருடைய மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது என்றால் ஆமாம், 2019ற்கு பிறகு தான் நடைபெற்றது. எதிரிகள் 2 முதல் 5 நபர்களுடைய வீட்டு விலாசமான நுங்கம்மாக்கத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம். 1 முதல் 5 எதிரிகளுக்கு மாற்றுமுறை ஆவணத்தின் சட்டத்தின்படி முறையான அறிவிப்பினை நீங்கள் அனுப்பவில்லை என்றால் அது சரியல்ல. 6வது எதிரிக்கும் உங்களுக்கும் சட்டப்படியான எந்த உறவு முறையும் இல்லை ஆகவே அவர் எந்த காசோலையும் உங்களுக்கு கொடுக்கவில்லை என்றால் அது தவறு. எனவே 6வது எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 எதிரிகள் சார்பாக எந்த காசோலையும் கொடுக்கப்படவில்லை எனவே அவர்கள் மீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கும் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

**Sd/- D.Naveen Durai Babu,**
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.